# இயற்கையே அரங்கு: இலங்கையின் மரபுசார் சூழலியல் அறிவை தற்கால நாடக எழுத்துருக்களில் மீட்டெடுத்தல்

# Nature as Theatre: Reclaiming Traditional Ecological Knowledge of Sri Lanka in Contemporary Playwriting

*Dr. Alagaiah Vimalraj*[1]


## Abstract:

Contemporary theatrical trends heavily focus on human emotions and social conflicts, reducing nature to a mere background or a decorative element. This anthropocentric approach presents a significant limitation for the field of theatre arts, particularly in an era marked by escalating ecological crises. In contrast, Sri Lanka's traditional art forms—such as *Koothu* (traditional dance-drama), ritualistic practices, and folk songs—perceive nature as a vital, living entity. This study examines how the traditional ecological knowledge (TEK) of Sri Lanka can be reclaimed and integrated into contemporary playwriting as both modern artistic techniques and core thematic content.

Specifically, through a qualitative analysis framework, this research investigates ritualistic ceremonies of the Batticaloa region, including *Mazhaikkaviya* (Rain Ballads) and *Maari Theertham* (Rain Miracle Rituals), to explore how nature is venerated as a sacred force and personified as an active protagonist. Drawing upon the theoretical frameworks of Environmental Theatre and Ecodramaturgy, this paper proposes methodologies for utilizing this traditional ritualistic language and land-based imagery in new theatrical productions. The primary finding of this study indicates that a new eco-conscious theatrical culture can be fostered through specific strategies, such as giving nature a voice as a character within scripts and demanding natural physical spaces in stage directions. Consequently, this study establishes that contemporary dramatists must evolve beyond being mere storytellers to become artistic activists dedicated to environmental preservation.


**Keywords:** *Ecological Aesthetics, Ritual, Koothu, Seasonal Cycles, Ecodramaturgy.*


### ஆய்வுச்சுருக்கம்

தற்கால நாடகப் போக்குகள் பெரும்பாலும் மனித உணர்வுகளையும், சமூகச் சிக்கல்களையும் மட்டுமே மையப்படுத்தி, இயற்கையை வெறும் பின்னணியாகவோ அல்லது அலங்காரப் பொருளாகவோ சுருக்கிவிட்டன. இந்த மனிதமையச் சிந்தனைப் போக்கானது, சூழலியல் நெருக்கடிகள் மலிந்துள்ள இக்காலகட்டத்தில் அரங்கியல் துறைக்கு ஒரு போதாமையாகவே உள்ளது. ஆனால், இலங்கையின் மரபுசார் கலை வடிவங்களான கூத்து, சடங்கு முறைகள், நாட்டார் பாடல்கள் போன்றவை இயற்கையை ஓர் உயிர்ப்புள்ள அங்கமாகக் கருதுகின்றன. இலங்கையின் மரபுசார் சூழலியல் அறிவை எவ்வாறு தற்கால நாடக எழுத்துருக்களில் நவீன கலை உத்திகளாகவும், உள்ளடக்கமாகவும் மீட்டெடுக்கலாம் என்பதை


[1] *Senior Lecturer, Discipline of Drama and Theatre, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University Sri Lanka*

*இவ்வாய்வு ஆராய்கிறது. குறிப்பாக, மட்டக்களப்புப் பிரதேசத்தின் சடங்கு மற்றும் கூத்துகளில் வரும் மழைக்காவியங்கள் மற்றும் மாரித் தீர்த்தம் போன்ற வழிபாட்டுச் சடங்குகளில் இயற்கை எவ்விதம் ஒரு கதைமாந்தராகவும், புனிதமானதாகவும் போற்றப்படுகிறது என்பதை பண்புசார் பகுப்பாய்வு முறைமையினூடாக இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.*

*சூழல் அரங்கியல், சூழல் நாடகவியல் ஆகிய கோட்பாடுகளின் ஊடாக, இந்த மரபுவழிச் சடங்கு மொழியையும், நிலம் சார்ந்த படிமங்களையும் புதிய நாடக ஆக்கங்களில் கையாள்வதற்கான வழிமுறைகளை இது முன்மொழிகிறது. நாடக எழுத்துருக்களில் இயற்கையை ஒரு கதாபாத்திரமாகப் பேசவைத்தல், மேடைக்குரிய குறிப்புகளில் இயற்கையான வெளிகளைக் கோருதல் போன்ற உத்திகள் மூலம் சூழல் விழிப்புணர்வு மிக்க ஒரு புதிய நாடகப் பண்பாட்டை உருவாக்க முடியும் என்பது இவ்வாய்வின் முதன்மை முடிவாகும். இதன் மூலம் நாடகக் கலைஞர்கள் வெறும் கதைசொல்லிகளாக மட்டுமன்றி, சூழலைக் காக்கும் கலைச் செயற்பாட்டாளர்களாக இயங்க வேண்டியதன் அவசியத்தை இவ்வாய்வு நிறுவுகிறது.*

***திறவுச்சொற்கள்:*** *சூழலியல் அழகியல், சடங்கு, கூத்து, பருவகாலங்கள், சூழல் நாடகவியல்.*

## அறிமுகம்

*மானிடப் பரப்பு இன்று எதிர்கொள்ளும் ஆகப்பெரிய சவாலாகச் சூழலியல் சிதைவு உருவெடுத்துள்ளது. உலகளாவிய வெப்பமயமாதல், காடழிப்பு, உயிரினப் பன்முகத்தன்மை இழப்பு என இயற்கையின் சமநிலை குலைந்துள்ள இக்காலகட்டத்தில், கலைகளும் இலக்கியங்களும் வெறும் அழகியல் சார்ந்தவையாக மட்டும் இருந்துவிட முடியாது. கலை என்பது சமூகத்தின் எதிரொலி மட்டுமல்ல, அது நிலத்தின் குரலாகவும் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இலங்கையின் நீண்டகால நாடக வரலாற்றை உற்றுநோக்கினால், அங்கு இயற்கை என்பது வெறும் நிலப்பரப்பாகவோ அல்லது நாடகக் காட்சிகளுக்கான அலங்காரப் பின்னணியோ அல்ல, மாறாக, அது ஓர் உயிருள்ள முதன்மைப் பாத்திரமாகவே விளங்கி வந்திருப்பதை அறியலாம்.*

*தொல்பழங்காலம் தொட்டு இலங்கையின் மரபுசார் கலைகளான கூத்து, வழிபாட்டுச் சடங்குகள் மற்றும் நாட்டார் பாடல்கள் யாவும் இயற்கையுடனான மாறாத பிணைப்பைக் கொண்டிருந்தன. நிலத்தைப் போற்றுதல், மழையை வேண்டுதல், ஆறுகளையும் காடுகளையும் தெய்வீகமானவையாகக் கருதுதல் என மக்களின் வாழ்வியல் அறம் இயற்கையைச் சார்ந்து அமைந்திருந்தது. ஆனால், தற்கால நவீன நாடகப் போக்குகள் பெரும்பாலும் ஐரோப்பிய மையச் சிந்தனை மற்றும் நகரமயமாக்கல் செல்வாக்கினால், மனித உணர்வுகளையும் சமூக முரண்பாடுகளையும் மட்டுமே முதன்மைப்படுத்தி வருகின்றன. இத்தகைய போக்கினால், அரங்கு என்பது இயற்கையிலிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு செயற்கை வெளியாக மாறியுள்ளது. 'மனித மையவாதம்' எனப்படும் இச்சிந்தனைப் போக்கானது, தற்கால நாடக எழுத்துருக்களில் இயற்கையை ஒரு சடப்பொருளாக அல்லது உயிரற்ற ஒரு கருவியாகச் சுருக்கிவிட்டது.*

*இந்தத் தாழ்நிலையை மாற்றுவதற்கு இலங்கையின் மரபுசார் சூழலியல் அறிவு ஒரு பெரும் திறவுகோலாகும். குறிப்பாக, மட்டக்களப்புப் பிரதேசத்தின் வடமோடி, தென்மோடி கூத்துகள் மற்றும் மழைக்காவியம் போன்ற வழிபாட்டுச் சடங்குகள், இயற்கைக்கும் மனிதருக்குமான உரையாடலை உயிர்ப்புடன் வைத்துள்ளன. மழைக்காவியம் என்பது வெறும் மழைக்கான வேண்டுதல் மட்டுமல்ல, அது வானுக்கும் மண்ணுக்கும் இடையிலான நீதியைப் பேசும் ஒரு சூழலியல் அறமாகும். அதேபோல, சடங்குகளில் பயன்படுத்தப்படும் வேப்பிலை, மஞ்சள், நீர் போன்ற இயற்கை மூலங்கள் ஒரு தூய்மையான சூழலியல் வெளியை மேடையில் உருவாக்குகின்றன. இத்தகைய மரபுசார் கூறுகளை நவீன நாடக எழுத்துருக்களில் எவ்வாறு கலை உத்திகளாகவும் உள்ளடக்கமாகவும் மீட்டெடுக்கலாம் என்பதே இவ்வாய்வின் மையப்புள்ளியாகும்.*

*நவீன நாடக ஆசிரியர்கள் இயற்கையை ஒரு குறியீடாக மட்டும் பயன்படுத்தாமல், ஒரு கதைமாந்தராகவே பேசவைப்பதன் மூலம், பார்வையாளர்களிடம் ஒரு புதிய சூழலியல் உணர்வைத் தோற்றுவிக்க முடியும். ஒரு மரம் வெட்டப்படும்போது அல்லது ஒரு ஆறு மணல் அகழ்வினால் சிதைக்கப்படும்போது, அந்த இயற்கைச் சிதைவை மனிதத் துயரத்திற்கு*

*இணையாகச் சித்திரிக்க வேண்டிய தேவையுள்ளது. இதுவே சூழல் அரங்கியல் மற்றும் சூழல் நாடகவியல் எனப்படும் நவீனக் கோட்பாடுகளின் அடிப்படை நோக்கமாகும்.*

*இலங்கையில் தற்போது நிலவி வரும் மனித-யானை முரண், காடழிப்பு போன்ற சூழல் இடர்களுக்குத் தீர்வுகாணும் ஒரு வலுவான ஊடகமாக நாடகத்தைப் பயன்படுத்த முடியும். நாடகக் கலை என்பது வெறும் பொழுதுபோக்கல்ல, அது சமூக மாற்றத்திற்கான, குறிப்பாகச் சூழலியல் மீட்பிற்கான ஒரு செயற்பாட்டு ஒத்திகையாகும். மரபுசார் அறிவு என்பது பழைமைவாதம் அல்ல, அது நிகழ்காலச் சூழல் நெருக்கடிகளுக்குத் தீர்வை நோக்கி நம்மை வழிநடத்தும் ஒரு புவிசார் ஞானமாகும்.*

*இவ்வாய்வானது, மட்டக்களப்புப் பிரதேசக் கூத்துகளையும் சடங்குகளையும் ஆதாரமாகக் கொண்டு, நவீன நாடகப் பிரதிகளில் நிலம் சார்ந்த படிமங்கள், நாட்டார் வழக்காற்றியல் மொழி மற்றும் சூழல்சார் மேடைக்குறிப்புகள் ஆகியவற்றை எவ்வாறு இணைக்கலாம் என்பதை விரிவாக அலசுகின்றது. இதன் மூலம், இலங்கைக்கு உரித்தான ஒரு தனித்துவமான "சூழல் நாடகப் பண்பாட்டை" உருவாக்குவதற்கான வழிமுறைகளை இக்கட்டுரை முன்மொழிகின்றது. இயற்கைக்கும் மனிதருக்குமான சிதைந்த உறவை மீட்டெடுத்து, "இயற்கையே அரங்கு" என்னும் விரிந்த பார்வையைத் தற்கால அரங்கச் செயல்பாடுகளில் நிலைநிறுத்துவதே இவ்வாய்வின் நோக்கிய இலக்காகும்.*

**ஆய்வுப் பிரச்சினை**

*தற்கால நவீன நாடகப் பிரதிகள் மிகப்பெரும்பாலும் மனிதர்களுக்கிடையிலான முரண்களை மட்டுமே பேசுபொருளாகக் கொள்கின்றன. சூழலியல் நெருக்கடிகள் மலிந்துள்ள இக்காலகட்டத்தில், நாடகப் பிரதிகளில் இயற்கையின் குரல் வலுவாகவும், பரவலாகவும் ஒலிக்காமல் இருப்பது ஒரு பாரிய குறைபாடாகும். மரபுசார் கலைகளில் இருந்த சூழல் காப்பு அறிவு, நவீன பிரதிகளில் முக்கியப்படுத்தப்படாது இருக்கின்றது. இதனால், நாடகம் சமூக மாற்றத்திற்கான ஊடகமாகச் செயல்படுவதில் இடைவெளி காணப்படுகின்றது. இந்த இடைவெளியை இனம் காண்பதே இவ்வாய்வின் பிரச்சினையாகும்.*

**ஆய்வு வினாக்கள்**

*மதிப்பீட்டாளரின் கருத்தின்படி சேர்க்கப்பட்ட ஆய்வு வினாக்கள் பின்வருமாறு:*

*1. இலங்கையின் மரபுசார் கூத்து மற்றும் சடங்கு முறைகளில் பொதிந்துள்ள சூழலியல் கூறுகள் மற்றும் மரபுசார் சூழலியல் அறிவு எத்தகையவை?*

*2. மரபுசார் சடங்கு மொழியையும் நிலம் சார்ந்த படிமங்களையும் தற்கால நவீன நாடக எழுத்துருவாக்கத்தில் கலை உத்திகளாக எவ்வாறு மாற்றியமைக்கலாம்?*

**ஆய்வின் நோக்கம்**

*இலங்கையின் மரபுசார் கலை வடிவங்களில் பொதிந்துள்ள சூழலியல் கூறுகளை அடையாளம் காணுதல்.*

*அடையாளம் காணப்பட்ட சூழலியல் அறிவை, நவீன நாடகப் பிரதிகளுக்கான எழுத்து உத்திகளாக மாற்றுதல்.*

*சூழல் அரங்கியல் கோட்பாட்டின் அடிப்படையில் புதிய நாடகப் பிரதிகளை உருவாக்குவதற்கான வரைவிலக்கணத்தை முன்மொழிதல்.*

**ஆய்வின் கருதுகோள்**

*நவீன நாடகப் பிரதிகளில் மரபுசார் சூழலியல் மொழிநடை, படிமங்கள் மற்றும் தொன்மங்களைப் பயன்படுத்துவதன் மூலம், பார்வையாளர்களிடம் சூழல் விழிப்புணர்வை ஆழமாக ஏற்படுத்த முடிவதோடு, இலங்கைக்கு உரித்தான ஒரு தனித்துவமான நவீன நாடகப் பாணியையும் உருவாக்க முடியும்.*

**இலக்கிய மீளாய்வு**

*சூழல் நாடகவியல் மற்றும் மரபுசார் கலைகள் குறித்த ஆய்வுகள் உலகளாவிய ரீதியிலும் உள்ளூர் ரீதியிலும் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பெர்க்ஸ் (*Berkes,*1999) தனது ஆய்வில், மரபுசார் சூழலியல் அறிவு என்பது மனிதர்களுக்கும் சூழலுக்குமான பல்லாண்டு கால உறவின் வழி உருவான அறிவுத் தொகுதி என்பதை நிறுவியுள்ளார். அரங்கியல் தளத்தில், செக்னர் (*Schechner, *2003) சடங்கு சார்ந்த அரங்குகள் வெறும் பொழுதுபோக்கிற்கானவை அல்ல, அவை விளைபயனை முதன்மையாகக் கொண்டவை என்று குறிப்பிடுகிறார். மே (*May, *2005) 'பசுமை நாடகவியல்' என்னும் கருத்தாக்கத்தின் மூலம் நாடகப் பிரதிகள் நிலத்தின் குரலை எதிரொலிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.*

*இலங்கைச் சூழலில், வித்தியானந்தன் (1962) கூத்துகளும் சடங்குகளும் தமிழர்களின் வாழ்வியலோடும் இயற்கை வழிபாட்டோடும் கொண்டுள்ள நேரடித் தொடர்பை விளக்கியுள்ளார். மௌனகுரு (1998) மட்டக்களப்புக் கூத்துகளில் வரும் விலங்குப் பாத்திரங்களின் உன்னத நிலையை ஆராய்ந்துள்ளார். ஆயினும், இந்த மரபுசார் சூழலியல் அறிவை தற்கால நவீன நாடக 'எழுத்துருவாக்க உத்தியாக' மாற்றுவது குறித்து விரிவான ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த ஆய்வு இடைவெளியை நிரப்புவதற்கே இக்கட்டுரை முயல்கிறது.*

**ஆய்வு நெறிமுறை**

*இவ்வாய்வு பண்புசார் ஆய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது.*

*தரவு மாதிரி மற்றும் பகுப்பாய்வு முறை: கிழக்கிலங்கையின் மட்டக்களப்புப் பிரதேசத்தில் நிகழ்த்தப்படும் சடங்குப் பாடல்கள் மற்றும் கூத்துப் பிரதிகள் (வடமோடி, தென்மோடி) ஆகியவற்றிலிருந்து இயற்கை சார்ந்த கூறுகள் மற்றும் படிமங்கள் மாதிரித் தரவுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.*

*ஒப்பீட்டு முறை: மரபுசார் பிரதிகளில் இயற்கை கையாளப்பட்ட பண்பினையும், நவீன பிரதிகளில் அது கையாளப்படும் தன்மையையும் ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.*

*கோட்பாட்டு அணுகுமுறை: டான்யா பீர்* (Beer, 2021) *மற்றும் தெரசா மே* (May, 2005) *ஆகியோரின் சூழல் நாடகவியல் மற்றும் சூழல் அரங்கியல் கோட்பாடுகளின் ஊடாகத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.*

**ஆய்வு எல்லை**

*பொருண்மை எல்லை: இவ்வாய்வானது நாடகத்தின் எழுத்துருவாக்கம் என்ற எல்லைக்குள் மட்டுமே நின்று ஆராய்கிறது. நடிப்பையோ, நெறியாள்கையையோ இது முதன்மையாகக் கொள்ளவில்லை.*

*புவியியல் எல்லை: மட்டக்களப்புப் பிரதேசக் கூத்து மரபுகள் மற்றும் கிழக்கிலங்கையின் சடங்கு முறைகளை மட்டுமே சான்றாதாரங்களாகக் கொண்டது.*

*கால எல்லை: தற்காலச் சூழலியல் பிரச்சினைகளை மையப்படுத்திய நவீன நாடகங்களை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டது.*

***மரபுசார் சூழலியல் அறிவை மீட்டெடுத்தல்***

*இலங்கையின் பண்டைய "குளம்-வயல்-கோவில்-காடு" எனும் வாழ்வியல் முறை ஒரு சிறந்த சூழலியல் சுழற்சிக்கு உதாரணமாக இருந்தது.*

*அ) மரபுசார் அறிவின் மீட்சி*

*பழங்கால இலங்கை விவசாயிகள் யானைகளை விரட்டப் பயன்படுத்திய 'குரக்கன் கஞ்சி' அல்லது 'கெக்கல்ல'* (Hekalla) *போன்ற நுட்பங்கள் இயற்கையைத் துன்புறுத்தாமல் விரட்டும் முறைகளாக இருந்தன. இத்தகைய மரபுசார் கூறுகளை நாடகப் பிரதியில் இணைப்பதன் மூலம் நவீனத் தலைமுறைக்கு ஒரு மாற்று வழியைக் காட்டலாம்.*

***ஆ) மேடைக்குறிப்பு உதாரணம்:***

*(குறிப்பு: யானையை விரட்டப் பட்டாசுகளையோ, தீப்பந்தங்களையோ மேடையில் பயன்படுத்த வேண்டாம். மாறாக, பாரம்பரியமான குரவை ஒலிகள் அல்லது மூங்கில் தட்டுகளின் மூலம் ஒரு மென்மையான எச்சரிக்கை ஒலியை உருவாக்கவும். இது ஒரு உயிரினத்தை அழிப்பதற்கான சத்தம் அல்ல, அது அந்த உயிரினத்தோடு நாம் உரையாடும் மொழி என்பதை நடிகர்களின் உடல்மொழி உணர்த்த வேண்டும்.)*

***மரபுசார் சூழலியல் அறிவும் அரங்கியலும்***

*மரபுசார் சூழலியல் அறிவு என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்கள், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தங்களின் வாழிடச் சூழலுடன் கொண்டிருந்த நேரடித் தொடர்பின் மூலம் ஈட்டிய அறிவின் தொகுப்பாகும். இது வெறும் தகவல்களின் திரட்டு மட்டுமல்ல் மாறாக அந்த நிலத்தின் மண், நீர், வானிலை, தாவரங்கள் மற்றும் விலங்குகள் குறித்த ஆழமான புரிதலையும் அவற்றுடன் மனிதன் கொண்டுள்ள உறவையும் உள்ளடக்கிய ஒரு வாழ்வியல் அறமாகும்.*

சூழலியல் அறிஞர் ஃபிக்ரட் பேர்க்ஸ் (Berkes, 1999) இதனை வரையறுக்கும்போது, *"உயிரினங்களுக்கும் அவற்றின் சூழலுக்கும் இடையிலான உறவு குறித்து, பண்பாட்டுப் பரிமாற்றங்கள் வழியாகத் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் ஒரு அறிவுச் சட்டகம்" (ப. 8) என்கிறார். அரங்கியல் நோக்கில் இத்தகைய அறிவு என்பது நூல்களில் ஆவணப்படுத்தப்படுவதற்கு முன்னரே, சடங்குகள், கூத்துகள் மற்றும் வாய்மொழிப் பாடல்கள் வழியாகவே சமூகத்தில் நிலைநிறுத்தப்பட்டது.*

*இலங்கையின் கிழக்கிலங்கைச் சூழலில், குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில், இந்தச் சூழலியல் அறிவு என்பது அரங்கு எனும் ஊடகத்தின் மூலமே மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது. கூத்துகளில் பயின்று வரும் நிலம் சார்ந்த படிமங்கள் அந்த நிலத்தின் தனித்துவத்தைப் பறைசாற்றுபவை. உதாரணமாக, மட்டக்களப்புப் பிரதேசத்தின் வடமோடி மற்றும் தென்மோடி கூத்துகள் பெரும்பாலும் விவசாய அறுவடைக்காலங்களிலேயே நிகழ்த்தப்படுகின்றன. இது உள்ளூர் மனிதரின் கலைச் செயற்பாடு இயற்கையின் பருவகாலச் சுழற்சியோடு ஒன்றிணைந்து செல்வதைக் காட்டுகிறது (மௌனகுரு, 2000).*

***இயற்கையை வழிபடுதலும் சடங்கு அரங்கும்***

*இலங்கையின் மரபுவழி நாடகப் பண்பாட்டில், குறிப்பாகத் தமிழ்ச் சூழலில், அரங்கு என்பது பொழுதுபோக்கிற்கான ஒரு வெளியாக மட்டும் அமையாமல், சூழலைச் சமநிலைப்படுத்தும் ஒரு சடங்கு முறையாகவே பார்க்கப்பட்டது. மனிதன் இயற்கையைத் தனக்குக் கீழான ஒன்றாகவோ அல்லது நுகர்வுப் பொருளாகவோ கருதாமல், தன்னைப் பாதுகாக்கும் ஒரு பேராற்றலாகக் கருதி வழிபட்டதன் விளைவே 'சடங்கு அரங்கு' ஆகும்.*

பேராசிரியர் சு. வித்தியானந்தன் *(1962)* குறிப்பிடுவது போல, *"கூத்துக்களும் சடங்குகளும் தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை: அவை பயிர்ச்செய்கை மற்றும் இயற்கை வழிபாட்டுடன் நேரடித் தொடர்புடையவை" (ப. 15). மட்டக்களப்புப் பிரதேசத்தில் நிகழ்த்தப்படும் சடங்கு நாடகங்கள் இதற்குச் சிறந்த சான்றாகும்.*

***வழிபாட்டுச் சடங்குகளின் சூழலியல் கூறுகள்:***

*மடை பரவுதல் மற்றும் பொங்கல்: இவை இயற்கையிடமிருந்து பெற்ற வளங்களுக்கு (நீர், தானியம்) மீண்டும் இயற்கையுக்கே படைக்கும் நன்றியறிதல் நிகழ்வுகளாகும்.*

*இயற்கைப் பொருட்களின் பயன்பாடு: சடங்குகளில் பயன்படுத்தப்படும் வேப்பிலை, மஞ்சள், நீர், நெருப்பு ஆகியன வெறும் அரங்கப் பொருள்களல்ல: அவை இயற்கையின் குறியீடுகளாகவும், நோய்க் கிருமிகளை அழிக்கும் சூழல் பாதுகாப்புப் பொருள்களாகவும் கொள்ளப்படுகின்றன. இத்தகைய சடங்கு முறைகளில் மனிதர் இயற்கையை ஆள்பவராக அல்லாமல், இயற்கையின் ஒரு கூறாகவே தம்மை அடையாளப்படுத்துகின்றனர் (கந்தையா, 1964).*

***மழைக்காவியம்: ஒரு சூழலியல் உரையாடல்***

*இயற்கையை வழிபடும் சடங்கு அரங்கிற்கு 'மழைக்காவியம்' ஒரு உன்னதமான எடுத்துக்காட்டாகும். கடும் வரட்சிக் காலங்களில் வானத்தைப் பார்த்து, கார்மேகக் கூட்டங்களைத் திரண்டு வருமாறு அழைக்கும்போது, அங்கு இயற்கை ஒரு 'கதைமாந்தராக' மாறுகிறது.*

*“நிலையான நவக்கிரகம் நின்றநிலை யாலோ*

*நீதிபுரி மன்னர்செங் கோல்வழுவி னாலோ...*

*இன்னிலமிம் மானிடர்கள் செய்தகுறை தானோ” (ஆறுமுகம், 2008, ப. 84).*

*இங்கு வரட்சி என்பது இயற்கையான நிகழ்வாக மட்டுமன்றி, மனிதத் தவறுகளின் அல்லது ஆட்சியின் அறம் தவறிய நிலையின் விளைவாகவும் பார்க்கப்படுகிறது. இது சூழலியல் சமநிலையை மனித அறத்துடன் இணைக்கும் மரபுசார் அறிவாகும். மேற்கத்திய அரங்கியல் ஆய்வாளர் ரிச்சர்ட் செக்னர் (ளுஉhநஉhநெசஇ 2003) தனது 'செயல்திறன் கோட்பாட்டில்' குறிப்பிடுவது போல, "மரபுசார் அரங்கியல் நிகழ்வுகள் கேளிக்கையை விட, விளைபயனை முதன்மையாகக் கொண்டவை" (ப. 112). அதாவது, மழைக்காவியம் பாடுவது என்பது மழையைக் கொண்டு வருவதற்கான ஒரு நேரடிச் சூழலியல் செயற்பாடாகும்.*

***விலங்குகள் மற்றும் நிலம் சார்ந்த பாத்திர வார்ப்புகள்:***

*நவீன நாடகங்களில் விலங்குகள் அல்லது மரங்கள் பெரும்பாலும் மனிதர்களால் வேடிக்கையாகச் சித்தரிக்கப்படும் பின்னணிகளாகவே உள்ளன. ஆனால், மரபுசார் கதையாடல்களில் அவை மனிதர்களுக்கு இணையான அல்லது மனிதர்களை விட உயர்வான ஆற்றல் கொண்ட கதாபாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளன. சி. மௌனகுரு (1998) தனது ஆய்வுகளில் குறிப்பிடுவது போல, மட்டக்களப்புக் கூத்துக்களில் வரும் அனுமன், கரடி போன்ற பாத்திரங்கள் வெறும் விலங்குகளாகக் காட்டப்படுவதில்லை; அவை தெய்வீகத் தன்மை கொண்டவையாகவும், மனிதர்களுக்கு அறிவுரை கூறும் ஞானம் கொண்டவையாகவும் சித்தரிக்கப்படுகின்றன (ப. 45).*

***கூத்துகளில் சூழலியல் பிரதியாக்கம்***

*கூத்து என்பது வெறும் பொழுதுபோக்குக் கலை மட்டுமல்ல, அது நிலத்தையும் மக்களையும் பிணைக்கும் ஓர் உயிர்நாடி. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழரின் வாழ்வில், கூத்துகள் எவ்வாறு சூழலியல் விழுமியங்களைப் பிரதிபலிக்கின்றன என்பதையும், அவை எவ்வாறு இயற்கையைப் பாதுகாக்கும் ஒரு கருவியாகச் செயல்படுகின்றன என்பதையும் விரிவாகக் காண்போம்.*

***1. நிலவகைப்பாடும் சூழலியல் பின்னணியும்***

*பண்டையத் தமிழர் நிலத்தை ஐந்தாகப் பகுத்தனர். ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய சிறுபொழுதும் பெரும்பொழுதும் கூத்துகளின் உள்ளடக்கத்தைத் தீர்மானித்தன. நிலத்தின் தன்மையே அங்கு நிகழும் கூத்தின் வடிவத்தை உருவாக்குகிறது.*

*குறிஞ்சி: மலையும் மலை சார்ந்த இடமும் என்பதால், அங்கு நிகழும் கூத்துகளில் விலங்குகள், அருவிகள் மற்றும் காடு சார்ந்த மரபுசார் அறிவு பொதிந்திருக்கும்.*

*நெய்தல்: கடலும் கடல் சார்ந்த இடமும் என்பதால், மீன்வளம் மற்றும் கடல் சீற்றங்களைப் போற்றும் பாடல்கள் ,டம்பெறும்.*

*“இயற்கை என்பது வழிபாட்டுக்குரியது மட்டுமல்ல, அது நம் வாழ்வின் ஒரு பகுதி” - இதுவே கூத்துகளின் அடிப்படை அறம்.*

***2. பருவநிலைச் சுழற்சியும் நிகழ்த்து முறைகளும்***

*மரபுசார் கூத்துகளின் எழுத்துருக்கள் மற்றும் நிகழ்த்துதல் முறைகள் சூழலியல் அறிவை மையமாகக் கொண்டவை. இதற்கு மட்டக்களப்புப் பிரதேசத்தின் வடமோடி மற்றும் தென்மோடி கூத்துகள் சிறந்த சான்றாகும்.*

*காலப் பிணைப்பு: இக்கூத்துகள் பெரும்பாலும் விவசாய அறுவடைக்காலங்களிலேயே நிகழ்த்தப்படுகின்றன. இது உள்ளூர் மக்களின் கலைச் செயற்பாடு இயற்கையின் பருவகாலச் சுழற்சியோடு எவ்வாறு ஒன்றிணைந்து செல்கிறது என்பதைக் காட்டுகிறது.*

*உயிரினப் பிரதியாக்கம்: புலியாட்டம், மயிலாட்டம் போன்ற கலைகளில், அந்தந்த உயிரினங்களின் அசைவுகளை அப்படியே உள்வாங்கி ஆடுவது, மனிதனுக்கும் பிற உயிரினங்களுக்குமான பிணைப்பை வலுப்படுத்துகிறது. இதுவே 'சூழலியல் பிரதியாக்கம்' எனப்படுகிறது.*

***3. மழைக்காவியம்: இயற்கைக்கும் மனிதனுக்குமான உரையாடல்***

*கூத்துகளில் சூழலியல் அறத்தைப் பேசும் மிகச்சிறந்த உதாரணமாக மழைக்காவியம் அல்லது அதன் பாடல்களைக் குறிப்பிடலாம். வறட்சிக் காலங்களில் மழை வேண்டிப் பாடப்படும் இப்பாடல்கள், மேகங்களை, மின்னலை மற்றும் வருணனை (மழைக்கடவுள்) நேரடியாக அழைத்து உரையாடும் பாங்கில் அமைந்திருக்கும்.*

*“கார்மேகக் கூட்டங்களே! கருணையுடன் திரண்டு வாருங்கள்...*

*வரண்ட பூமி குளிரச் சாரல் மழை பொழியுங்கள்...”*

*இந்த வரிகள் இயற்கை என்பது மனிதனுக்கு அந்நியமான ஒன்று அல்ல, அது உரையாடக் கூடிய ஓர் உயிர் என்பதை உணர்த்துகின்றன.*

***4. சூழலியல் அறமும் மனித நடத்தையுமே மழையின் ஆதாரம்***

*மழை என்பது வெறும் நீரின் சுழற்சி மட்டுமல்ல, அது மனிதரின் நடத்தை மற்றும் ஆட்சியின் நேர்மையுடன் தொடர்புடையது என்ற சூழலியல் அறம் இங்கு வலியுறுத்தப்படுகிறது.*

*"நிலையான நவக்கிரகம் நின்றநிலை யாலோ*

*நீதிபுரி மன்னர்செங் கோல்வழுவி னாலோ...*

*,ன்னிலமிம் மானிடர்கள் செய்தகுறை தானோ"*

*(ஆதாரம்: கண. ஆறுமுகம் (தொகு.), 2008, ப. 84)*

*இங்கு வறட்சி என்பது ஒரு ,யற்கை நிகழ்வாக மட்டுமன்றி, மனிதத் தவறுகளின் அல்லது அரசியல் பிழைகளின் விளைவாகவும் பார்க்கப்படுகிறது. இது சூழலியல் சமநிலையை மனித அறத்துடன் ,ணைக்கும் மரபுசார் அறிவாகும்.*

***5. விளைபயன் சார்ந்த அரங்கியல்***

மேற்கத்திய அரங்கியல் ஆய்வாளர் ரிச்சர்ட் செக்னர் (Richard Schechner) தனது *‘செயல்திறன் கோட்பாட்டில்’* குறிப்பிடுவது போல: *“மரபுசார் அரங்கியல் நிகழ்வுகள் கேளிக்கையை விட, விளைபயனை* (Efficacy)*முதன்மையாகக் கொண்டவை”* (Schechner, 2003, p. 112).

*அதாவது, மழைக்காவியம் பாடுவது என்பது வெறும் கலை நிகழ்வு மட்டுமல்ல, அது மழையைக் கொண்டு வருவதற்கான ஒரு நேரடிச் சூழலியல் செயற்பாடாகும்.*

***6. இயற்கை வளங்களின் குறியீடுகளும் இன்றைய தேவையும்***

*கூத்துகளில் பயன்படுத்தப்படும் உடைகள், அணிகலன்கள் மற்றும் ஒப்பனைகள் யாவும் அந்தந்தப் பகுதியின் இயற்கை வளங்களிலிருந்தே பெறப்படுகின்றன.*

*பச்சை வன்னம்: காடுகளையும் செழிப்பையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.*

*மலர்ச் சூடுதல்: இலைகளையும் பூக்களையும் தலையில் சூடி ஆடுவது, மனிதன் இயற்கையின் ஒரு துளி என்பதைக் காட்டுகிறது.*

*நிகழ்காலத் தேவை: இன்றைய புவி வெப்பமாதல் சூழலில், மரங்கள் பேசும் கதைகள் அல்லது ஆறுகளின் அழுகை போன்ற தலைப்புகளில் நவீனக் கூத்துகளை நிகழ்த்துவதன் மூலம் சூழலியல் விழிப்புணர்வை மக்களிடம் எளிதாகக் கொண்டு செல்ல முடியும்.*

***விலங்குகள் மற்றும் நிலம் சார்ந்த பாத்திர வார்ப்புகள்: உயிர் மையவாதச் சிந்தனை***

*நவீன நாடகக் கலையில் இயற்கை மற்றும் விலங்குகளின் சித்தரிப்பு பெரும்பாலும் ஒரு பின்னணி அலங்காரமாகவோ அல்லது நகைச்சுவைக்காகவோ சுருங்கிவிட்டது. ஆனால், நமது மரபுசார் கூத்துகளில் இவை மிக உயரிய இடத்தைப் பெற்றுள்ளன. இப்பாடப்பகுதியைச் சூழலியல் மற்றும் மானுடவியல் நோக்கில் விரிவாகக் காண்போம்.*

***1. மனித மையவாதத்தை உடைத்தல்***

*நவீன காலச் சிந்தனையில் மனிதனே உலகின் மையம் என்ற மனித மையவாதப் போக்கு மேலோங்கியுள்ளது. இதனால் பிற உயிரினங்கள் மனிதனுக்குத் தொண்டு செய்யும் கருவிகளாகவே பார்க்கப்படுகின்றன. ஆனால், மரபுசார் கூத்துகள் இந்த எல்லையை உடைக்கின்றன.*

*சமத்துவப் பார்வை: கூத்துகளில் விலங்குகள் வெறும் காட்சிப் பொருட்களாக அன்றி, உணர்ச்சிகளும் அறிவும் கொண்ட பாத்திரங்களாக உலவுகின்றன.*

*உயிர் மையவாதம்: நிலமும் அதில் வாழும் அனைத்து உயிர்களும் சமமான மதிப்புடையவை என்ற உயிர் மையவாதச் சிந்தனை கூத்துப் பிரதிகளில் ஆழமாக விதைக்கப்பட்டுள்ளது.*

***2. தெய்வீகமும் ஞானமும் கொண்ட பாத்திர வார்ப்புகள்***

*மரபுசார் கதையாடல்களில் விலங்குகள் மனிதர்களை விட ஆற்றல் மிக்கவையாகவும், வழிகாட்டும் ஞானம் கொண்டவையாகவும் படைக்கப்பட்டுள்ளன. இது குறித்து ஆய்வாளர் சி. மௌனகுரு தனது ஆய்வுகளில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:*

*"மட்டக்களப்புக் கூத்துகளில் வரும் அனுமன், கரடி, மற்றும் பறவை போன்ற பாத்திரங்கள் வெறும் மிருகங்களாகக் காட்டப்படுவதில்லை; அவை தெய்வீகத் தன்மை கொண்டவையாகவும், மனிதர்களுக்கு அறிவுரை கூறும் ஞானம் கொண்டவையாகவும் சித்தரிக்கப்படுகின்றன" (மௌனகுரு, 1998, ப. 45).*

*அனுமன் பாத்திரம்: அனுமன் கூத்தில் வரும்போது, அவர் வெறும் குரங்கல்ல் அறத்தின் காவலராகவும், ஆற்றலின் வடிவமாகவும் போற்றப்படுகிறார்.*

*கரடி மற்றும் பறவைகள்: இவை பெரும்பாலும் சிக்கலான தருணங்களில் மனிதர்களுக்கு நல்வழி காட்டும் நிமித்தங்களாக அல்லது தூதுவர்களாக வருகின்றன. இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு பாலமாக இவை செயல்படுகின்றன.*

***3. நிலம் ஒரு பாத்திரமாக***

*கூத்துகளில் நிலம் என்பது வெறும் மேடை அல்ல. குறிஞ்சி, முல்லை என அந்தந்த நிலப்பரப்பே ஒரு உயிருள்ள பாத்திரமாகச் செயல்படுகிறது.*

*நிலத்தின் ஆற்றல்: மரங்கள், மலைகள் மற்றும் ஆறுகள் கூத்துகளில் பேசும் ஆற்றல் கொண்டவையாகச் சித்தரிக்கப்படுவதுண்டு. இவை மனிதர்களின் அறமற்ற செயல்களைக் கண்டிப்பவையாகவும், இயற்கைச் சமநிலையை வலியுறுத்துபவையாகவும் அமைகின்றன.*

*சூழலியல் ஆன்மா: ஒரு காடு அழிக்கப்படும்போது ஏற்படும் வலி, கூத்துப் பாடல்களில் இயற்கை அன்னையின் புலம்பலாக வெளிப்படுத்தப்படுகிறது. இது பார்வையாளர்களிடையே ஒருவித சூழலியல் குற்றவுணர்வை ஏற்படுத்தி, பாதுகாக்கும் எண்ணத்தைத் தூண்டுகிறது.*

***4. நவீன நாடகங்களுக்கான வழிகாட்டல்***

*இன்றைய நவீன நாடகப் பிரதிகளை உருவாக்கும்போது, மரபுசார் கூத்துகளின் இந்த விழுமியங்களை உள்வாங்குவது காலத்தின் கட்டாயமாகும்.*

*கேளிக்கையைத் தாண்டி: விலங்குகளை வெறும் கேலிப் பொருளாகக் காட்டாமல், அவற்றின் தனித்துவமான வாழ்வியலை மதிக்கும் வகையில் பாத்திரங்களை வடிவமைக்க வேண்டும்.*

*விழுமியக் கடத்தல்: மரபுசார் கூத்துகளில் உள்ள இந்த சூழலியல் ஆன்மாவை மீட்டெடுப்பதன் மூலம், நாம் வெறும் கதைகளைச் சொல்லாமல், சூழலைப் பாதுகாக்கும் உயரிய அறத்தைப் பார்வையாளர்களிடம் கொண்டு சேர்க்க முடியும்.*

***தற்கால எழுத்துருக்களில் மீட்டெடுத்தல்: அணுகுமுறைகள்***

*நவீன நாடகப் பிரதிகள் பெரும்பாலும் மனிதர்களுக்கு இடையிலான உணர்ச்சிப் போராட்டங்களையும் சமூக முரண்களையும் மட்டுமே மையப்படுத்துகின்றன. ஆனால், வளர்ந்து வரும் புவி வெப்பமாதல் மற்றும் இயற்கை அழிவு போன்ற சூழலில், சூழலியல் நாடகவியல் என்பது ஒரு புதிய தேவையாக உருவெடுத்துள்ளது. மரபுசார் அறிவை நவீன எழுத்துருவாக்கத்தில் மீட்டெடுக்கும் மூன்று முக்கிய அணுகுமுறைகளை இங்கே காண்போம்.*

***1. மனித மையவாதத்தை அகற்றி உயிர் மையவாதத்தை நோக்கிய நகர்வு***

*நவீன பிரதிகள் மனிதனைச் சுற்றியே சுழல்வதைத் தவிர்த்து, இயற்கையை ஒரு முதன்மைக் கதாபாத்திரமாக மாற்ற வேண்டும். மரபுசார் கூத்துகளில் காடு அல்லது மரம் என்பது வெறும் காட்சிப் பின்னணி அல்ல் அது ஒரு வரலாற்றுச் சாட்சி அல்லது தீர்ப்பு வழங்கும் அறம்.*

*அணுகுமுறை: விலங்குகள் மற்றும் தாவரங்களுக்குப் பேசும் ஆற்றலையும், தீர்மானிக்கும் அதிகாரத்தையும் பிரதியில் வழங்குதல்.*

*உதாரணம்: பிரித்தானிய நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரின் மேக்பெத் நாடகத்தில் 'பிர்னம் காடு' நகர்ந்து வருவது ஒரு குறியீடாக இருந்தாலும், நவீன சூழலியல் மறுவாசிப்பில் அது இயற்கை மனிதனின் அநீதிக்கு எதிராகத் திரண்டெழுவதைக் காட்டுகிறது.*

*"இயற்கை என்பது நாம் பார்ப்பதற்கான ஒரு கண்ணாடி மட்டுமல்ல, அது நம்மைப் பார்க்கும் ஒரு கண்" எனச் சூழலியல் ஆய்வாளர் கார்ல் கிரோபர் (Karl Kroeber) குறிப்பிடுகிறார்.*

***2. காலச் சுழற்சியும் பருவகால ஒழுங்கும்***

*மரபுசார் கூத்துகள் பருவநிலைக்கு ஏற்ப (அறுவடைக்காலம், மழைக்காலம்) நிகழ்த்தப்படுவதைப் போல, நவீனப் பிரதிகளும் காலத்தின் சுழற்சியை உள்ளடக்கத்தில் கொண்டு வர வேண்டும்.*

*அணுகுமுறை: கதை சொல்லும் முறையில் நேர்க்கோட்டுத் தன்மையை விடுத்து, பருவகால மாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட சுழற்சி முறையைப் பின்பற்றுதல்.*

*உதாரணம்: கனடிய பழங்குடி மக்களின் நாடகங்களில், நிலத்தின் வரலாறு என்பது மனிதர்களின் கதையோடு பின்னிப் பிணைந்திருக்கும். அவர்களின் 'மீட்புப் பிரதிகள்' பெரும்பாலும் நிலமே கதை சொல்லியாக இருக்கும் பாணியைப் பின்பற்றுகின்றன.*

*ஏற்கனவே குறிப்பிட்டது போல, மழைக்காவியப் பாடல்கள் மழையை ஒரு நபராகவே கருதி உரையாடுவது, காலத்தின் தேவையைச் சமூகத் தேவையாக மாற்றும் அணுகுமுறையாகும்.*

***3. விளைபயன் மற்றும் சடங்கு முறைகளை மீட்டெடுத்தல்***

*ரிச்சர்ட் செக்னர் குறிப்பிடுவது போல, நாடகம் என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல, அது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் கருவி.*

*அணுகுமுறை: பார்வையாளர்களை வெறும் வேடிக்கை பார்ப்பவர்களாக வைக்காமல், அவர்களைச் சூழலியல் செயல்பாட்டில் பங்கேற்கச் செய்யும் 'சடங்கு சார்' எழுத்து முறையைக் கையாளுதல்.*

*உதாரணம்: ஆகஸ்டோ போயல் என்ற பிரேசில் நாட்டு அறிஞரின் 'ஒடுக்கப்பட்டோரின் அரங்கம்' கோட்பாட்டைச் சூழலியல் தளத்தில் பயன்படுத்தலாம். ஒரு காடு அழிக்கப்படுவதைத் த தடுப்பது எப்படி என்பதை நாடகத்தின் ஊடாகப் பார்வையாளர்களே மேடைக்கு வந்து தீர்வு சொல்லும் மன்ற நாடக முறை இதற்குச் சிறந்த உதாரணம்.*

***4. கலப்பு அணுகுமுறை: மரபும் நவீனமும்***

*நவீன அரங்கியல் நுட்பங்களான ஒளி அமைப்பு மற்றும் ஒலி வடிவமைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி, மரபுசார் கூத்துகளின் ஆன்மாவை வெளிப்படுத்த முடியும்.*

*உதாரணம்: மட்டக்களப்புக் கூத்தின் வடமோடி ஆட்ட அசைவுகளைப் பயன்படுத்தி, ஒரு மரம் வெட்டப்படும்போது ஏற்படும் அதிர்வை வெளிப்படுத்துவது. இது நவீனப் பார்வையாளருக்கு ஒரு புதிய அழகியலை வழங்குவதோடு, ஆழமான சூழலியல் செய்தியையும் கடத்தும்.*

*சி. மௌனகுருவின் பார்வை: "மரபு என்பது தேங்கி நிற்பதல்ல் அது ஓடும் நதி. அதன் நீரை நவீனக் கலங்களில் ஏந்திச் செல்லும்போது அதன் பயன்பாடு கூடுகிறது" என்ற கருத்தின் அடிப்படையில், நவீன எழுத்துருக்கள் அமைய வேண்டும்.*

***மண் வாசனை கொண்ட மொழி மற்றும் படிமங்கள்: சூழலியல் தாளலயம்***

*நவீன நாடகங்கள் பெரும்பாலும் உலகமயமாக்கல் சூழலில் ஒருவிதமான நிலமற்ற மொழியைப் பேசுகின்றன. அதாவது, அவை நகரத்து உரைநடையையோ அல்லது பிற மொழிபெயர்ப்புத் தன்மையையோ கொண்டிருப்பதால், அந்தந்த மண்ணின் ஆன்மாவோடு தொடர்பு கொள்வதில்லை. ஆனால், மரபுசார் கூத்துகளின் மொழி என்பது அந்த நிலத்தின் உயிர்ப்பான சூழலியல் தாளலயத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது.*

***1. மொழி: சூழலின் இசை வடிவம்***

*பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் கூத்தின் மொழியை வெறும் சொல்லாடலாகப் பார்க்காமல், அதை ஒரு நிலப்பரப்பின் ஒட்டுமொத்தப் பதிவாகக் காண்கிறார்:*

*"கூத்தின் மொழி என்பது வெறும் கருத்துப் பரிமாற்ற ஊடகம் மட்டுமல்ல் அது அந்தச் சூழலின் சத்தங்களையும், அசைவுகளையும் தனக்குள் கொண்டிருக்கும் ஓர் இசை வடிவமாகும்" (சிவத்தம்பி, 1980, ப. 22).*

*இதன் பொருள் என்னவென்றால், ஒரு கூத்துப் பாடலில் வரும் ஓசைநயங்கள், அந்தப் பிரதேசத்தின் காற்றின் வேகம், அருவியின் ஓசை அல்லது கடலலைகளின் சீற்றம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன.*

***2. சூழலியல் பழமொழிகளும் படிமங்களும்***

*நவீனப் பிரதிகளில் நிலத்தின் மொழியை மீட்டெடுக்க, அந்தந்தப் பகுதிக்குரிய சூழலியல் பழமொழிகளையும், உவமைகளையும் பயன்படுத்த வேண்டும். இது வெறும் அலங்காரச் சொற்கள் அல்ல, இவை ஒரு சமூகத்தின் சூழலியல் அறிவு பொதிந்த கருவூலங்களாகும்.*

*சாதாரண வசனம்: "மழை பெய்யவில்லை, நாங்கள் க~;டப்படுகிறோம்."*

*சூழலியல் மொழி (சந்தத்துடன்):*

*"வானம் வரண்டு போச்சு... வவ்வாலும் செத்துப்போச்சு...*

*தூரத்து மேகங்களே... துளியாச்சும் சிந்தாயோ!"*

*இத்தகைய மொழிநடை பார்வையாளர்களின் மரபார்ந்த நினைவுகளைத் தூண்டி, இயற்கைக்கும் அவர்களுக்குமான உணர்வுப்பூர்வமான பிணைப்பை மீளுருவாக்கம் செய்கிறது.*

***3. உலகளாவிய உதாரணங்கள்: நிலத்தின் மொழியை மீட்டெடுத்தல்***

*அ) பெடெரிகோ கார்சியா லோர்கா* (Federico García Lorca - *எசுப்பானியா*):

*எசுப்பானிய நாடக ஆசிரியரான லோர்கா, தனது நாடகங்களில் (உதா:* Blood Wedding*) அந்தலூசியா* (Andalusia)*பகுதியின் நாட்டுப்புறப் படிமங்களை மிகுதியாகப் பயன்படுத்தினார். அவர் மொழியில் நிலவு, குதிரை, கத்தி, மண் போன்ற சொற்கள் வெறும் பொருட்களாக வராமல், ஒரு நிலப்பரப்பின் விதியாக வெளிப்படும். இவருடைய மொழிநடை நிலத்தின் இரத்தமும் மணமும் கலந்ததாகப் போற்றப்படுகிறது.*

*ஆ) வோல் சோயின்கா* (Wole Soyinka – *நைஜீரியா):*

*நைஜீரியாவின் யோருபா* (Yoruba) *பழங்குடி இனத்தின் மரபுகளைத் தனது நாடகங்களில் மீட்டெடுத்தவர். அவர் தனது "மரணம் மற்றும் மன்னரின் குதிரைவீரன்"* (Death and the King's Horseman) *போன்ற நாடகங்களில், யோருபா மொழியின் தாளலயத்தையும், பழமொழிகளையும் பயன்படுத்துகிறார்.*

*"ஒரு மரம் விழுந்தால், வானம் விழுந்துவிட்டதாகக் கருதி ஓடாதே; அது நிலத்தின் மறுசுழற்சி" என்ற ஆப்பிரிக்கப் பழமொழி போன்ற படிமங்கள் அவர் பிரதிகளில் சூழலியல் அறத்தைப் பேசுகின்றன.*

*இ) இந்தியச் சூழலில்: கிரிஷ்கர்னாட் மற்றும் ஹபீப் தன்வீர்:*

*ஹபீப் தன்வீர் தனது "சரண்தாஸ் சோர்" போன்ற நாடகங்களில் சத்தீஸ்கர் மாநிலத்தின் பழங்குடி மொழியையும், நாட்டுப்புறப் பாடல்களையும் அப்படியே பயன்படுத்தினார். அந்த மொழியில் உள்ள "பச்சையத்தன்மை" நவீன நாடகங்களின் வறண்ட மொழிக்கு மாற்றாக அமைந்தது.*

***4. சூழலியல் மொழிநடையும் நவீன எழுத்துருவாக்கமும்: மூன்று அணுகுமுறைகள்***

*நவீன நாடக ஆசிரியர் கையில் எடுக்க வேண்டிய மொழியியல் உத்திகள்:*

*1. ஒலிக்குறிப்புச் சொற்கள்: காற்றின் இரைச்சல், பறவையின் சிறகடிப்பு போன்றவற்றை வெறும் ஒலியாகக் காட்டாமல், வசனங்களின் சந்தத்திலேயே கொண்டு வருதல்.*

*2. சூழலியல் விடுகதைகள்: பிரதியில் விடுகதைகளைப் பயன்படுத்துவதன் மூலம், இயற்கைப் பொருட்கள் குறித்த அறிவைப் பார்வையாளர்களிடம் கடத்துதல்.*

*3. வட்டார வழக்கு: தரப்படுத்தப்பட்ட மொழியைத் தவிர்த்து, மண்ணின் மணம் வீசும் வட்டார வழக்கை மேடையில் ஒலிப்பதன் மூலம், அந்த நிலத்தின் அதிகாரத்தை நிலைநாட்டுதல்.*

***5. மேற்கோள்: மொழி - ஒரு சூழலியல் ஆவணம்***

*ஆய்வாளர் எட்வர்ட் சாபிர்* (Edward Sapir) *குறிப்பிடுவது போல: "ஒரு மொழியின் சொற்களஞ்சியம் என்பது அந்த மக்கள் வாழும் இயற்கைச் சூழலின் நேரடிப் பிரதிபலிப்பாகும்."*

*எனவே, நவீன நாடகங்களில் நாம் கூத்துகளின் மொழியைப் பயன்படுத்தும்போது, சிதைந்து வரும் ஒரு பண்பாட்டையும் அதன் சூழலியலையும் சேர்த்தே பாதுகாக்கிறோம்.*

**உலகளாவிய சூழல்சார் அரங்க எடுத்துக்காட்டுகள்**

*1. இங்கிலாந்தின் தி எர்த் குவேக்ஸ்* (Earthquakes in London) *- மைக் பார்ட்லெட்*

*இந்த நாடகத்தில் மேடை வடிவமைப்பாளர் மிரியம் பூதர் (ஆசையைஅ டீரநவாநச), மேடையைச் செயற்கைப் பொருட்களால் நிரப்பாமல், மறுசுழற்சி செய்யப்பட்ட காகிதங்கள் மற்றும் துணிகளைப் பயன்படுத்தினார்.*

*மேடைக்குறிப்பு உதாரணம்: "மேடையானது ஒரு வணிகக் கிடங்கு போலத் தோன்ற வேண்டும். பிளாஸ்டிக் அல்லது உலோகப் பொருட்களுக்குப் பதிலாக, பழைய செய்தித் தாள்களால் ஆன மலைகளையும், தூக்கி எறியப்பட்ட அட்டைப் பெட்டிகளையும் கொண்டே காட்சிக் கோலங்களை உருவாக்க வேண்டும்."*

*2.* மேன்க்ஸ் (Manx) *- ஆஸ்திரேலிய அரங்கச் செயல்பாடுகள்*

*டான்யா பீரின் வழிகாட்டுதலில் உருவான இந்தத் திட்டத்தில், 'உயிருள்ள மேடை'* (The Living Stage)*எனும் கருத்தாக்கம் பயன்படுத்தப்பட்டது. இங்கு மேடை என்பது வெறும் காட்சிப் பொருள் அல்ல, அது ஒரு தோட்டம்.*

*மேடைக்குறிப்பு உதாரணம்: "காட்சிக்குத் தேவையான இருக்கைகள் மற்றும் தடுப்புகள் யாவும் உண்ணக்கூடிய கீரை வகைகள் மற்றும் செடிகள் நடப்பட்ட மரப்பெட்டிகளால் உருவாக்கப்பட வேண்டும். நாடகத்தின் இறுதியில் பார்வையாளர்கள் அந்தச் செடிகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்."*

*சூழல்சார் அரங்கியல் என்பது வெறும் பொருள்களைத் தவிர்ப்பது மட்டுமல்ல, அது ஒரு அறம் சார்ந்த செயல்பாடு.*

*3. டான்யா பீரின் அடிப்படை நோக்கம்*

*டான்யா பீர் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "அரங்க மேடை என்பது ஒரு நுகர்வுப் பொருளாக* (Consumerist product)*இருக்கக் கூடாது. மாறாக, அது அந்த இடத்தின் சூழலோடு இயைந்த ஒரு வாழ்வாதாரச் சுழற்சியாக* (Ecological cycle) *இருக்க வேண்டும்."* (Beer, 2021).

*இதன் பொருள், ஒரு நாடகம் முடிந்த பிறகு மேடை அலங்காரப் பொருட்கள் குப்பைத் தொட்டிக்குச் செல்லாமல், மீண்டும் மண்ணுக்கோ அல்லது பயன்பாட்டிற்கோ செல்ல வேண்டும் என்பதாகும்.*

*4. பீட்டர் புரூக்கின் 'வெற்று வெளி'* (The Empty Space)

*நவீன நாடகவியலாளர் பீட்டர் புரூக், தேவையற்ற அலங்காரங்களைக் களைவது பற்றி முன்னரே பேசியுள்ளார்: "எந்த ஒரு வெற்று வெளியையும் நான் ஒரு மேடையாக அழைக்க முடியும். ஒரு மனிதன் அந்த வெளியின் குறுக்கே நடந்து செல்ல, மற்றொருவன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தால், அங்கே ஒரு நாடகச் செயல் தொடங்கிவிடுகிறது."*

*சூழல் அரங்கியலில் இந்த வெற்று வெளி என்பது, இயற்கையோடு இணைந்த வெளியைக் குறிக்கிறது.*

***நவீன நாடகப் பிரதிக்கான மேலதிக மேடைக்குறிப்பு உதாரணங்கள்***

*தங்கள் கருத்தை வலுப்படுத்த, கீழே உள்ளவாறு மேடைக்குறிப்புகளைப் பிரதிகளில் கையாளலாம்:*

*உதாரணம் 1: காற்று அல்லது புயலைக் குறிக்க*

*(குறிப்பு: மின்விசிறிகளையோ அல்லது பிளாஸ்டிக் தாள்களையோ பயன்படுத்த வேண்டாம். மாறாக, மூங்கில் குச்சிகளை உரசுவதன் மூலமோ அல்லது உலர்ந்த சருகுகளை ஒரு முறத்தில் இட்டு அசைப்பதன் மூலமோ காற்றின் ஒலியை எழுப்பவும். நடிகர்கள் மெல்லிய பருத்தித் துணிகளை அசைப்பதன் மூலம் காற்றின் வேகத்தைப் புலப்படுத்தலாம்.)*

*உதாரணம் 2: ஒரு கட்டிடத்தை அல்லது சுவரைக் குறிக்க*

*(குறிப்பு: மரப்பலகைகளையோ அல்லது தெர்மாகோல் சுவர்களையோ அமைக்க வேண்டாம். நூலால் ஆன வலைப்பின்னல்களைக் கொண்டோ அல்லது பழைய சணல் பைகளைக் கொண்டோ எல்லைகளை வகுக்கவும். இவை காட்சி முடிந்தபின் எளிதில் அகற்றப்படக் கூடியதாகவும், மீண்டும் பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.)*

***மரபுசார் சூழலியல் அறிவை மீட்டெடுத்தல்***

*இலங்கையின் பண்டைய "குளம்-வயல்-கோவில்-காடு" எனும் வாழ்வியல் முறை ஒரு சிறந்த சூழலியல் சுழற்சிக்கு உதாரணமாக இருந்தது.*

***அ) மரபுசார் அறிவின் மீட்சி***

*பழங்கால இலங்கை விவசாயிகள் யானைகளை விரட்டப் பயன்படுத்திய குரக்கன் கஞ்சி அல்லது "கெக்கல்ல"* (Hekalla) *போன்ற நுட்பங்கள் இயற்கையைத் துன்புறுத்தாமல் விரட்டும் முறைகளாக இருந்தன. இத்தகைய மரபுசார் கூறுகளை நாடகப் பிரதியில் இணைப்பதன் மூலம் நவீனத் தலைமுறைக்கு ஒரு மாற்று வழியைக் காட்டலாம்.*

*கெக்கல்ல: ஒலியின் ஊடாக நிகழும் தார்மீக எச்சரிக்கை*

*பழங்கால விவசாயிகள் யானைகளை விரட்டுவதற்குப் பயன்படுத்திய 'கெக்கல்ல' (மூங்கில் அல்லது உலர்ந்த மரக்கட்டைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட தாளக்கருவி) ஒரு நுணுக்கமான சூழலியல் கருவியாகும்.*

*குரக்கன் கஞ்சி மற்றும் வாசனை வழித் தடுப்பு:*

*யானைகள் மிக நுணுக்கமான வாசனை உணர்வு கொண்டவை. பண்டைய விவசாயிகள் யானையின் வழித்தடங்களை மறிக்காமல், தமது வயல்களைப் பாதுகாப்பதற்குச் சில குறிப்பிட்ட வாசனை திரவங்களைப் பயன்படுத்தினர்.*

*சூழலியல் அறம்: குரக்கன் கஞ்சி அல்லது சில வகை மூலிகைக் கரைசல்களை வயல்களைச் சுற்றித் தெளிக்கும்போது, அந்த வாசனை யானைக்கு ஒருவித ஒவ்வாமையை அல்லது 'மென்மையான தடையை'* (Soft Barrier) *ஏற்படுத்தும். இது யானையைத் துன்புறுத்தாது, மாறாக அந்த இடத்தை அது தவிர்ப்பதற்கான ஒரு 'உளவியல் வேலியாக' அமையும்.*

***ஆ) மேடைக்குறிப்பு உதாரணம்:***

*குறிப்பு: யானையை விரட்டப் பட்டாசுகளையோ, தீப்பந்தங்களையோ மேடையில் பயன்படுத்த வேண்டாம். மாறாக, பாரம்பரியமான 'குரவை' ஒலிகள் அல்லது மூங்கில் தட்டுகளின் மூலம் ஒரு மென்மையான எச்சரிக்கை ஒலியை உருவாக்கவும். இது ஒரு உயிரினத்தை அழிப்பதற்கான சத்தம் அல்ல, அது அந்த உயிரினத்தோடு நாம் உரையாடும் மொழி என்பதை நடிகர்களின் உடல்மொழி உணர்த்த வேண்டும்.*

**வாழிட இழப்புத் துயரமும் கூட்டு ஆற்றுப்படுத்தலும்**

*கிளென் அல்பிரெக்ட் விளக்கும் சோலாஸ்டால்ஜியா என்பது, ஒருவன் தன் சொந்த நிலத்தில் இருக்கும்போதே, அந்நிலம் சிதைக்கப்படுவதால் ஏற்படும் அந்நியப்படுதல் ஆகும். மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு, காடழிப்பு மற்றும் இயற்கைச் சீற்றங்களால் நிலத்தின் அடையாளம் மாறும்போது மக்கள் அடையும் உளவியல் பாதிப்பு இது.*

***அரங்கு எவ்வாறு மருந்தாகிறது?***

*மருத்துவம் தனிமனிதனின் மன அழுத்தத்தைக் கையாள்கிறது. ஆனால், அரங்கியல் அதனை ஒரு கூட்டுத் துயரமாக அங்கீகரிக்கிறது. மக்கள் ஒன்றுகூடி ஒரு நாடகத்தைப் பார்க்கும்போதும், அதில் பங்குபெறும்போதும் தங்கள் துயரம் தனிப்பட்டதல்ல, அது ஒரு சமூகத் துயரம் என்பதை உணர்கின்றனர். இந்த ஒன்றுபடுதல் தான் ஆற்றுப்படுத்தலின் முதல் படி.*

***பேராசிரியர் சி. ஜெயசங்கரின் முன்னோடி முயற்சிகள்***

*மட்டக்களப்பின் கூத்து மரபையும், நவீனத் தெருவெளி அரங்கையும் இணைத்து சி. ஜெயசங்கர் முன்னெடுத்த செயல்பாடுகள், சூழலியல் விழிப்புணர்வையும் தாண்டி உளவியல் ஆற்றுப்படுத்தலாக அமைந்தன.*

***அ) பிள்ளை அழுத கண்ணீர் (சிறுவர் நாடகம்)***

*சிறுவர்களிடையே சூழல் குறித்த அக்கறையை உருவாக்குவதோடு, போர் மற்றும் இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மன இறுக்கத்தைப் போக்கும் கருவியாக இது அமைந்தது.*

*சூழலியல் மீட்சி: இயற்கையை ஒரு தோழனாகச் சித்தரிப்பதன் மூலம், அழிந்த சூழலை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கையைச் சிறுவர்களிடம் விதைத்தது.*

***ஆ) பச்சைப் பூமி வீட்டிலே மற்றும் எழுத்தாணி***

*இவை வெறும் தகவல்களைச் சொல்லும் நாடகங்கள் அல்ல் மாறாக மக்களுடன் உரையாடும் வடிவங்கள்.*

*மண் அகழ்வு மற்றும் வாழ்வாதாரம்: மட்டக்களப்பின் நிலத்தடி நீர் மட்டம் குறைவதற்கும், மண் அகழ்விற்கும் இடையிலான தொடர்பை இந்நாடகங்கள் மக்கள் மொழியில் பேசின.*

*பங்குபற்றுதல்: ஒரு பார்வையாளராக மட்டுமன்றி, அத்துயரத்தை அனுபவித்த ஒருவராக நீங்களும் இதில் பங்குபெற்றிருப்பது, இக்கருத்தாக்கத்திற்கு ஒரு நேரடிச் சான்றாதாரமாக அமைகிறது.*

***ஆற்றுப்படுத்தும் சடங்காக நவீன நாடகப் பிரதி***

*தாங்கள் குறிப்பிட்டது போல, ஒரு நாடகப் பிரதி அழிவோடு முடிந்துவிடக் கூடாது. அது மீட்டெடுப்பின் சடங்காக மாற வேண்டும்.*

***அ) நாடகப் பிரதி அணுகுமுறை: சிதைவிலிருந்து செழுமைக்கு***

*ஒரு நாடகத்தின் கட்டமைப்பு பின்வருமாறு அமையலாம்:*

*1. தொடக்கநிலை: செழுமையான நிலத்தின் நினைவு (மரபுசார் அறிவு).*

*2. முரண்: மண் அகழ்வு அல்லது ஆக்கிரமிப்பால் ஏற்படும் சிதைவு (சோலாஸ்டால்ஜியா).*

*3. தீர்வுஃஆற்றுப்படுத்தல்: மக்கள் ஒன்றிணைந்து ஆற்றைத் தூய்மைப்படுத்துதல் அல்லது மரக்கன்றுகளை நடுதல்.*

*சூழலியல் பெண்ணியவாதி மரியா மீஸ் (ஆயசயை ஆநைள) மற்றும் வந்தனா சிவா ஆகியோர் இணைந்து எழுதிய 'சூழலியல் பெண்ணியம்' நூலில் ஒரு கருத்தைக் குறிப்பிடுகின்றனர்: "வாழ்வை அழிக்கும் சக்திகளுக்கு எதிரான போராட்டமானது, வாழ்வைப் பேணும் செயல்களின் மூலமே முழுமை பெறுகிறது."*

*இதனை அடிப்படையாகக் கொண்டு, நாடகத்தின் இறுதியில் மக்கள் இணைந்து ஒரு செயலைச் செய்வது (உதா: மட்பாண்டங்களில் நீர் ஊற்றுதல்) ஒரு சடங்கு போல நிகழ்த்தப்பட வேண்டும். இதுவே பார்வையாளர்களின் மனக்காயத்தை ஆற்றும் மருந்தாகும்.*

***மட்டக்களப்புக் கூத்து மரபும் மீண்டெழுதலும்***

*மட்டக்களப்பு மக்கள் சுனாமி போன்ற பேரிடர்களுக்குப் பிறகு மீண்டும் கூத்து ஆடத் தொடங்கியதை ஒரு உயிர் பிழைத்தல் கலை என்று கூறலாம்.*

*மீளுருவாக்கம்: கூத்தின் தாளக்கட்டும், பாடல்களும் மண்ணின் அதிர்வுகளோடு தொடர்புடையவை. அந்த அதிர்வுகள் நிலத்திற்கும் மக்களுக்கும் இடையிலான உடைந்த உறவை மீண்டும் பிணைக்கின்றன.*

***செயற்பாட்டுக்கான ஒத்திகை***

***ஆகஸ்டோ போல்: செயல்திறன் மிக்க அரங்கு***

போல் அவர்களின் கோட்பாட்டின்படி, பார்வையாளர் என்பவர் வெறும் வேடிக்கை பார்ப்பவர் அல்ல, அவர் ஒரு பங்குபற்றுபவர். சூழலியல் நாடகங்களில் இக்கோட்பாடு எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பின்வரும் நிலைகளில் காணலாம்:

முரண்பாட்டைக் கண்டறிதல்: ஒரு நாடகத்தில் காடு அழிக்கப்படுவதையோ அல்லது நீர்நிலை ஆக்கிரமிக்கப்படுவதையோ காட்டிவிட்டு, இதனை எவ்வாறு தடுக்கலாம்? எனப் பார்வையாளர்களிடமே விவாதிக்கலாம்.

மேடையிலேயே தீர்வு: பார்வையாளர்கள் மேடைக்கு வந்து, ஒரு குறிப்பிட்ட சூழல் அழிவைத் தடுப்பதற்கான மாற்று வழிகளை நடித்துக் காட்டலாம். இது அவர்களுக்கு நிஜ வாழ்க்கையில் அத்தகைய சிக்கல்களை எதிர்கொள்ளும் துணிவைத் தருகிறது.

**பாடசாலைக் கலைத்திட்டமும் உணர்வுசார் கல்வியும்**

தகவல் சார்ந்த கல்வி மூளைக்கு மட்டுமே வேலை கொடுக்கிறது. ஆனால், நாடகம் என்பது உடல் மற்றும் உணர்வு சார்ந்த அனுபவமாகும்.

**அ) தகவல் எள அனுபவம்**

வகுப்பறை பாடம்: "மரங்கள் கரியமில வாயுவை உள்வாங்கிப் பிராண வாயுவைத் தருகின்றன" என்ற தகவலை மட்டும் வழங்குகிறது.

சூழல் நாடகம்: ஒரு மாணவன் மரமாக நடிக்கும்போது, அதன் கிளைகள் வெட்டப்படும் வலியைத் தனது உடலில் உணர்கிறான். மழையின் குளிர்ச்சியையும், மண்ணின் ஈரத்தையும் மேடைக்குறிப்புகளின் வழியே அவன் அனுபவிக்கும்போது, இயற்கையுடனான அவனது பிணைப்பு உயிர்ப்படைகிறது.

**ஆ) உடல்ரீதியான தொடர்பு**

மரபுசார் சூழலியல் அறிவைக் கொண்ட நாடகங்களில் மாணவர்கள் நடிக்கும்போது, அவர்கள் பயன்படுத்தும் இயற்கைப் பொருட்கள் (மட்பாண்டங்கள், துணிகள், தானியங்கள்) அவர்களுக்கு மண்ணின் மீதான நுகர்வு உணர்வைத் தாண்டிய ஒரு மதிப்பினை வழங்குகின்றன.

**சூழல் பாதுகாவலர்களாக மாற்றும் செயல் ஒத்திகை**

ஆகஸ்டோ போல் கூறிய ஒத்திகை என்பது ஒரு போலிச் செயல் அல்ல, அது நிஜ வாழ்க்கையில் செயல்படுவதற்கான தயார்படுத்தல் ஆகும்.

நாடகப் பிரதி ஒரு கருவி: ஒரு நாடகத்தில் ஒரு மாணவன் யானைக்கும் மனிதனுக்கும் இடையில் சமாதானம் செய்பவராகவோ அல்லது ஆற்றைத் தூய்மைப்படுத்துபவராகவோ நடிக்கும்போது, அவன் அறியாமலேயே அந்தப் பண்பை உள்வாங்குகிறான்.

சமூக மாற்றம்: பள்ளி மேடையில் நிகழ்த்தப்படும் ஒரு சூழல் நாடகம், அந்த மாணவனின் குடும்பத்திலும் அவன் வாழும் தெருவிலும் ஒரு விவாதத்தைத் தொடங்குகிறது.

மேற்கோள்: ஆகஸ்டோ போல் தனது நூலில் குறிப்பிடுவது போல, "அரங்கு என்பது ஒரு சமூக ஆயுதம். அந்த ஆயுதத்தைப் பயன்படுத்த மக்கள் பழகிக்கொள்ள வேண்டும்." (டீழயடஇ 1979).

**இலங்கையின் சூழலில் இதன் தேவை**

இலங்கையின் இன்றைய நிலையில், காடழிப்பு மற்றும் மணல் அகழ்வு போன்றவற்றுக்கு எதிராக மாணவர்களை வெறும் 'அறிவு' கொண்டவர்களாக மட்டும் வளர்க்காமல், 'அறம்' சார்ந்த சூழல் போராளிகளாக மாற்ற அரங்கியல் இன்றியமையாதது.

மேடைக்குறிப்பு:

குறிப்பு: மாணவர்கள் ஒரு குழுவாக மேடையின் நடுவே அமர்ந்து, கற்பனையாக ஒரு விதையை நட்டு, அதற்கு நீர் ஊற்றி, அது மரமாக வளர்வதை உடல் அசைவுகளின் மூலம் காட்ட வேண்டும். மரம் வளர்ந்ததும் அதன் நிழலில் அவர்கள் இளைப்பாறுவதை உணர்வுப்பூர்வமாகச் செய்ய வேண்டும். இந்தச் செயல் அவர்களுக்கு 'உருவாக்குதலின்' மகிழ்ச்சியைத் தரும்.

**இக்காலப் பொருத்தப்பாடு**

இலங்கையானது தற்போது எதிர்கொண்டுள்ள காடழிப்பு, யானை-மனித முரண் போன்ற பாரிய சூழலியல் சவால்களுக்குத் தீர்வுகாண இக்கோட்பாடு இன்றியமையாதது.

சூழலியல் நீதியும் புவி ஜனநாயகமும்: இலங்கையின் யானை-மனித முரணைக் கையாளும்போது, யானையை எதிரியாகக் காட்டாமல், தனது இழந்த வீட்டையும் உணவையும் தேடி அலைந்து திரியும் ஓர் அகதியாகச் சித்தரிக்க வேண்டும். இது பார்வையாளரிடம் கருணையை உருவாக்கும்.

சூழல் துயரத்தை ஆற்றுப்படுத்தல்: வாழிட இழப்புத் துயரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, அரங்கியல் 'கூட்டு ஆற்றுப்படுத்தலை' வழங்குகிறது. மட்டக்களப்பில் சி. ஜெயசங்கர் அவர்களின் 'பிள்ளை அழுத கண்ணீர்', 'பச்சைப் பூமி வீட்டிலே' போன்ற முன்னோடி நாடக ஆக்கங்கள் இதற்குச் சிறந்த சான்றுகளாகும்.

**முடிவுரையும் ஆய்வு முடிவுகளும்**

சூழலியல் ஆவணங்களாகக் கூத்துகள்: மட்டக்களப்பின் கூத்துகளும் மழைக்காவியங்களும் வெறும் வழிபாட்டு நிகழ்வுகள் மட்டுமல்ல, அவை அந்தந்தப் பிரதேசத்தின் சூழலியல் தரவுகளைப் பதிவு செய்யும் ஆவணங்களாகும்.

இயற்கையின் செயல்நிலை: மரபுசார் கதையாடல்களில் உள்ள இயற்கையின் கதைமாந்தர் தன்மையை, தற்கால நாடகங்களில் மாய யதார்த்தவாத உத்தி மூலம் வெற்றிகரமாகக் கையாள முடியும்.

மொழி மற்றும் நிலத் தொடர்பு: நாட்டார் வழக்காற்றியல் மொழியும் சந்தங்களும் பார்வையாளர்களின் ஆழ்மனதில் சூழல் மீதான கரிசனையைத் தூண்டும் ஆற்றல் கொண்டவை.

ஆற்றுப்படுத்தல் ஊடகம்: புதிய நாடகப் பிரதிகள் சூழல் அழிவினால் ஏற்படும் மனச்சோர்வைப் போக்கும் கூட்டு உளவியல் சிகிச்சையாகவும், சூழல் பாதுகாப்பிற்கான ஒத்திகைக்களமாகவும் அமையும்.

**முன்மொழிவுகள்**

நாடக ஆசிரியர்கள் தங்கள் எழுத்துருக்களில் மனிதரல்லாத பிற உயிரினங்களின் குரல்களும் ஒலிப்பதற்கு இடம் அளிக்க வேண்டும்.

நாடகப் பிரதியின் மேடைக்குறிப்புகளில் செயற்கை நெகிழிகளைத் தவிர்த்து, மக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்துவதை விதியாக்க வேண்டும்.

அறைகளுக்குள் அமர்ந்து எழுதுவதைத் தவிர்த்து, சூழல் பாதிப்புக்குள்ளான இடங்களுக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு சார்ந்து எழுத வேண்டும்.

நான்கு சுவர்களுக்குள் நிகழும் மேடை நாடகங்களுக்கு அப்பால், திறந்தவெளி இயற்கை வெளிகளை அரங்காகப் பயன்படுத்த வேண்டும்.

முடிவாக, சூழலியல் நெருக்கடிகள் நிறைந்த இக்காலகட்டத்தில், "கலை வாழ்வுக்காகவும், இப்புவியின் இருப்புக்காகவும்" என்ற நிலைப்பாடே அவசியமானது. இலங்கையின் மரபுசார் அறிவை நவீன நாடகங்களில் மீட்டெடுப்பதன் மூலம், நாம் இழந்த நிலத்தையும், சிதைந்த உறவுகளையும் கலை வழியாக மீளக் கட்டியெழுப்ப முடியும்.

**உசாத்துணைப் பட்டியல்**

***ஆங்கில நூல்கள்:***


- Berkes, F. (1999). Sacred Ecology: Traditional Ecological Knowledge and Resource Management. Taylor & Francis.

- Schechner, R. (2003). Performance Theory (2nd ed.). Routledge.
- Beer, T. (2021). Ecoscenography: An Introduction to Ecological Design for Performance. Palgrave Macmillan.
- May, T. J. (2005). "Greening the Theater: Taking Ecocriticism from Page to Stage". Interdisciplinary Literary Studies, 7(1), 84–103.
- Albrecht, G. (2005). "Solastalgia: A New Concept in Health and Identity". Philosophy Activism Nature, 3, 41-55.
- Boal, A. (1979). Theatre of the Oppressed. Pluto Press.
- Shiva, V. (2005). Earth Democracy: Justice> Sustainability> and Peace. South End Press.


***தமிழ் நூல்கள்:***


- *மௌனகுரு, சி. (1998). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள். கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.*
- *வித்தியானந்தன், சு. (1962). தமிழர் சால்பும் அரங்கியலும். பேராதனை: பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடு.*
- *சிவத்தம்பி, கா. (1980). இலங்கையில் தமிழினத் தொன்மை. யாழ்ப்பாணம்: பூபாலசிங்கம் புத்தகசாலை.*
- *மௌனகுரு, சி. (2005). பழையதும் புதியதும்: அரங்கியல் கட்டுரைகள். மட்டக்களப்பு: அரங்கம் வெளியீடு.*
- *சிவத்தம்பி, கா. (2004). அரங்கியலும் பண்பாடும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.*
- *மௌனகுரு, சி. (2000). ஈழத்து நாடக அரங்கு: மரபும் மாற்றமும். மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு.*
- *கந்தையா, வி.சீ. (1964). மட்டக்களப்புத் தமிழகம். மட்டக்களப்பு: ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம். (இது மட்டக்களப்பு நாட்டார் வழக்காறுகளுக்கான மிகச்சிறந்த மூல நூல்).*
- *ஆறுமுகம், கண. (தொகு.). (2008). கண்ணகி அம்மன் பத்ததியும் பாடல்களும். மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு.*